*Aadi Sale Started - ₹100 Amazon Gift Card Free! Get Offer* x



Published: 26 Jun 2023 9 AM Updated: 26 Jun 2023 9 AM

# Doctor Vikatan: ரத்தத்தைச் சுத்திகரிக்கும் வீட்டு சிகிச்சைகளைப் பின்பற்றலாமா?

ஆர்.வைதேகி

FOLLOW US ON Google News
INSTALL VIKATAN APP

Doctor Vikatan: ரத்தத்தைச் சுத்திகரிக்கும் வீட்டு சிகிச்சைகளைப் பின்பற்றலாமா?



ரத்தம்

Share

சமூகவலைத்தளங்களில் பகிரப்படுவது போல 'இந்த ஜூஸை குடித்தால் ரத்தம் சுத்தமாகும், இந்த சிரப்பை குடித்தால் ரத்தம் சுத்திகரிக்கப்படும்' என்றெல்லாம் அலோபதி மருத்துவம் எதையும் பரிந்துரைப்பதில்லை.

இந்தக் கட்டுரையை ஆடியோவில் கேட்க
00:00 00:00
Help
1x 1.5x 2x

Published: 26 Jun 2023 9 AM Updated: 26 Jun 2023 9 AM

# Doctor Vikatan: ரத்தத்தைச் சுத்திகரிக்கும் வீட்டு சிகிச்சைகளைப் பின்பற்றலாமா?

Doctor Vikatan: ரத்தத்தைச் சுத்திகரிக்கும் வீட்டு சிகிச்சைகளைப் பின்பற்றலாமா?

FOLLOW US ON Google News
INSTALL VIKATAN APP

ஆர்.வைதேகி

**சமூகவலைத்தளங்களில் பகிரப்படுவது போல 'இந்த ஜூஸை குடித்தால் ரத்தம் சுத்தமாகும், இந்த சிரப்பை குடித்தால் ரத்தம் சுத்திகரிக்கப்படும்' என்றெல்லாம் அலோபதி மருத்துவம் எதையும் பரிந்துரைப்பதில்லை.**




ரத்தம்

Share

இந்தக் கட்டுரையை ஆடியோவில் கேட்க

00:00 00:00

1x 1.5x 2x

**Doctor Vikatan: ரத்தத்தைச் சுத்திகரிக்கும் முறைகள் என்று சமூக வலைத்தளங்களில் பரவும் வீடியோக்களை பார்க்கிறேன். வீட்டிலிருந்தபடியே எளிய சிகிச்சைகளின் மூலம் ரத்தத்தைச் சுத்திகரிக்க முடியுமா? அதற்கான வழிகளைச் சொல்லுங்களேன்.**

**பதில் சொல்கிறார் சென்னையைச் சேர்ந்த ரத்தவியல் மற்றும் ரத்தப்புற்றுநோய் சிகிச்சை மருத்துவர் அருணா**





ரத்தவியல் & ரத்தப்புற்றுநோய் சிகிச்சை மருத்துவர் அருணா|சென்னை.

இதுபோன்ற வீடியோக்கள் பரவும் செய்திகள் மிகவும் தவறானவை. சிலர் செப்சிஸ் போன்ற அதிதீவிர இன்ஃபெக்ஷனால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். அந்நிலையில் அவர்களது சிறுநீரகச் செயல்பாடும் பாதிக்கப்பட்டிருக்கும். சிறுநீரக நோயாளிகளுக்கு டயாலிசிஸ் செய்ய வேண்டி இருக்கும்.

இதுபோன்ற நிலைகளில், சம்பந்தப்பட்ட நோயாளிகளுக்கு இன்ஃபெக்ஷனை குறைக்க சில வழிகள் பின்பற்றப்படும். அவை ரத்தத்தில் உள்ள தொற்றைக் குறைக்க உதவும்.

மற்றபடி சமூகவலைத்தளங்களில் பகிரப்படுவது போல `இந்த ஜூஸை குடித்தால் ரத்தம் சுத்தமாகும், இந்த சிரப்பை குடித்தால் ரத்தம் சுத்திகரிக்கப்படும்' என்றெல்லாம் அலோபதி மருத்துவம் எதையும் பரிந்துரைப்பதில்லை.

எனவே இந்தத் தகவல்களின் உண்மைத்தன்மை தெரியாமல் பின்பற்றுவதைத் தவிர்ப்பதுதான் சிறந்தது. ஊட்டச்சத்துள்ள உணவின் மூலமே ரத்தத்துக்குத் தேவையான ஊட்டம் கிடைக்கும். ரத்த ஓட்டம் சீராக இருப்பவர்களுக்கு ரத்தத்தைச் சுத்திகரிக்கும் தேவையும் ஏற்படாது.



Blood (Representational Image)

o Read



Doctor Vikatan: அந்தரங்க உறுப்பில் அரிப்பு.... பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசல் உதவுமா?

உங்களுடைய விஷயத்தில் ரத்தத்தைச் சுத்திகரிக்க வேண்டிய தேவை என்ன என்று தெரியவில்லை. உங்களுக்கு உடல்நலத்தில் ஏதேனும் பிரச்னை இருந்தால் நீங்களாக அதற்கான காரணத்தைக் கற்பனைசெய்துகொண்டு சுய மருத்துவம் மேற்கொள்ளாமல் மருத்துவ ஆலோசனையை நாடுவதுதான் பாதுகாப்பானது.

**உங்கள் கேள்விகளை கமென்ட் பகுதியில் பகிர்ந்து கொள்ளுங்கள்; அதற்கான பதில்கள் தினமும் விகடன் இணையதளத்தில் #DoctorVikatan என்ற பெயரில் வெளியாகும்.**

**இந்தக் கட்டுரைகளையும் படிக்கலாமே!**